தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 253 | 4 Pages | 11.4.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 253 | 4 பக்கங்கள் | 11.4.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை**
**அஃதிலார் மேற்கொள் வது**

**விளக்கம்:**
தவக்கோலமும் தவஒழுக்கமும் உடையவர்க்கே பொருந்துவதாகும்; அக் கோலத்தை தவஒழுக்கம் இல்லாதவர் மேற்கொள்வது வீண்முயற்சியாகும்.

# சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நிர்வாகிகள் சந்திப்பு

சென்னை, ஏப்.11

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நிர்வாகிகள் இன்று சந்தித்து பேசினர். அப்போது வக்பு சட்ட முன்வடிவை முழுமையாக திரும்ப பெற பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தனர். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச்செயலகத்தில் இன்று காலை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் மாநிலத் தலைவர் ஆர்.அப்துல் கரீம் தலைமையில் மாநிலப் பொருளாளர் ஏ.இப்ராஹிம், துணைத்தலைவர் கே.தாவூத் கைசர், துணை பொதுச் செயலாளர் ஏ.கே.அப்துல் ரஹீம், மாநில செயலாளர் அன்சாரி ஆகியோர் சந்தித்து பேசினர். அப்போது ஒன்றிய அரசு அறிமுகம் செய்துள்ள வக்பு திருத்த முன்வடிவினை முழுமையாக திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனி தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.



மேலும் சந்திப்பின் போது \"முன்னாள் முதல்வர் கலைஞர் சிறுபான்மையினருக்கு 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை சட்டமாக்கினார். இஸ்லாமியர்களின் சதவீதத்தோடு ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு குறைவாக இருந்தது. 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்தி தர வேண்டும் என்று நீண்ட வருடங்களாக இஸ்லாமிய சமுதாயம் கோரிக்கை வைத்து வருகிறது. சிறுபான்மையினரான இஸ்லாமியர்களின் இட ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. தங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்ப இட ஒதுக்கீட்டை உயர்த்தி தர வேண்டும்\\" என்றும் கோரிக்கை விடுத்தனர். இந்த சந்திப்பின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

## தீவிரமடையும் வர்த்தகப்போர்: சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125 சதவீதமாக உயர்வு



வாஷிங்டன், ஏப்.11

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பொறுப்பேற்றதுமுதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, பரஸ்பர வரிவிதிப்பு என்ற பெயரில் இந்தியா, சீனா, உள்பட பல்வேறு நாடுகளுக்கு கூடுதலாக வரி விதித்துள்ளார். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 27 சதவீத வரி விதித்துள்ளார்.

அதேபோல், சீனப் பொருட்களுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த 10 சதவீத வரிகளை மார்ச் மாத துவக்கத்தில் 20 சதவீதமாக டிரம்ப் உயர்த்தினார். அமெரிக்காவிற்குள் பென்டானில்(Fentanyl) உள்ளிட்ட வீரியமிக்க போதை மருந்துகள் கடத்தப்படுவதைத் தடுக்க சீனா போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டி இந்த நடவடிக்கையை அவர் மேற்கொண்டார்.

அதன்பின்னர், பரஸ்பர வரிவிதிப்பு என்ற வகையில் கடந்த வாரம் 34 சதவீத கூடுதல் வரியை விதித்தார். இதன்மூலம் சீன பொருட்கள் மீதான இறக்குமதி வரியானது 54 சதவீதமாக உயர்ந்தது. அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதிலடியாகசீனாவும் 34 சதவீத கூடுதல் வரி விதிப்பதாகஅறிவித்தது. இதனால் கடும் அதிருப்தி அடைந்த டிரம்ப், சீன இறக்குமதிக்கு கூடுதலாக 50 சதவீத வரி விதித்தார். இதன் மூலம் சீனாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் மொத்த வரி 104 சதவீதமாக அதிகரித்தது. இந்த வரிவிதிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. இதனால், உலக அளவில் பெரும் வர்த்தகப்போர் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125 சதவீதம் உயர்த்தப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.


இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

உலக சந்தைகளுக்கு சீனா காட்டிய மரியாதையின்மையின் அடிப்படையில், அமெரிக்காவால் சீனாவுக்கு விதிக்கப்படும் வரியை 125 சதவீதமாக உயர்த்துகிறேன், இது உடனடியாக அமலுக்கு வருகிறது. எதிர்காலத்தில், அமெரிக்காமற்றும்பிறநாடுகளைகிழித்தெறியும்நாட்கள்இனிநிலையானவை அல்ல என்பதை சீனா உணரும் என்று நம்புகிறேன்.

மாறாக, வர்த்தகம், வர்த்தக தடைகள், கட்டணங்கள், நாணய கையாளுதல் மற்றும் நாணயமற்ற கட்டணங்கள் தொடர்பான விவாதிக்கப்படும் பாடங்களுக்கு தீர்வு காண 75 க்கும் மேற்பட்ட நாடுகள் அமெரிக்க பிரதிநிதிகளை அழைத்துள்ளன. மேலும் இந்த நாடுகள் எனது வலுவான ஆலோசனையின் பேரில், அமெரிக்காவிற்கு எதிராக எந்த வகையிலும், வடிவத்திலும் பழிவாங்கவில்லை என்பதன் அடிப்படையில், 90 நாள் இடைநிறுத்தத்தை நான் அங்கீகரித்துள்ளேன்.

மேலும் இந்தக் காலகட்டத்தில் கணிசமாகக் குறைக்கப்பட்ட 10 சதவீத பரஸ்பர கட்டணமும் உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு; 3 பேர் பலி



விர்ஜீனியா, ஏப்.11

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் அமைந்த விர்ஜீனியா மாகாணத்தில் ஸ்பாட்சில்வேனியா கவுன்டி பகுதியில் டவுன்ஹவுஸ் வளாகத்தில் மர்ம நபர்கள் சிலர் ஆயுதங்களுடன் வந்தனர். அவர்கள் மக்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில், 3 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்து உள்ளனர். இந்த பகுதி வாஷிங்டன் நகரில் இருந்து தென்மேற்கே 105 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதனைதொடர்ந்துசம்பவம்நடந்தபகுதியைதவிர்க்கும்படிபொதுமக்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு பின்னணியில் யார் உள்ளனர் என்ற விவரம் உடனடியாக வெளியிடப்படவில்லை. உடனடியாக யாரும் கைது செய்யப்படவில்லை. தாக்குதலை நடத்தியதற்கான காரணமும் தெரிய வரவில்லை. எனினும், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 3 பேரும் துப்பாக்கி குண்டு காயங்களுடன் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுடைய நிலைமை என்னவானது மற்றும் பிற தகவல்கள் உள்பட எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை. இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## சிங்கப்பூர்: தீ விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் மகனை சந்தித்த பவன் கல்யாண்



சிங்கப்பூர் சிட்டி, ஏப்.11

ஆந்திர மாநில துணை முதல்மந்திரி பவன் கல்யாண். இவரது இளைய மகன் மார்க் சங்கர் (வயது 10). சிறுவன் மார்க் சங்கர் சிங்கப்பூரின் ரிவர்வேலி பகுதியில் உள்ள பள்ளியில் பயின்று வந்தான். அந்த பள்ளி, அடுக்குமாடி கட்டிடத்தின் 3வது மாடியில் செயல்பட்டு வந்தது.

இதனிடையே, அந்த பள்ளியில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில், பள்ளி மாணவி உயிரிழந்தார். மேலும், பவன் கல்யாணின் மகன் மார்க் சங்கர் உள்பட 20 பேர் படுகாயமடைந்தனர். இதையடுத்து, படுகாயமடைந்த மார்க் சங்கர் உள்பட அனைவரும் மருத்துவமனை அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்து குறித்து அறிந்த பவன் கல்யாண் நேற்று சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார்.

இந்நிலையில், சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மகன் மார்க் சங்கரை பவன் கல்யாண் இன்று சந்தித்தார். தீ விபத்தில் கை, கால்களில் படுகாயமடைந்த மார்க் சங்கருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தீ விபத்தின்போது கரும்புகையை சுவாசித்ததால் சிறுவனுக்கு நுரையீரலில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில் மகனை பவன் கல்யாண் சந்தித்தார். மேலும், மகனின் உடல்நிலை குறித்து டாக்டர்களிடம் அவர் விசாரித்தார்.

## சங்க கூட்டம் சிறப்பாக நடைபெற்றது

நம்முடைய சங்கத்தின் கூட்டம், முன் அறிவித்தபடி காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. மாநிலத் தலைவர் திரு. S.V. கனிராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், திருப்பூர் மாவட்ட தலைவர் திரு. ராஜன் சுப்புராஜ், மாவட்ட செயலாளர் திரு. லாரன்ஸ் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட சுமார் 15 பேர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். கூட்டம் சுமார் 3 மணி 30 நிமிடங்கள் தொடர்ந்தது. கூட்டத்தில் சங்கத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர். சிலர் தவிர்க்க முடியாத காரணங்களால் வர முடியாமல், தங்களது வருகையின்மையை அலைபேசி மூலம் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தின் போது சங்கத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டன. சிலகருத்துகள்விவாதத்திற்குரிய முக்கியத்துவம் பெற்றிருந்தன; சில கருத்துகள் சிறிய அளவில் சலசலப்பையும் ஏற்படுத்தின.

இந்த சூழலில், மாநிலத் தலைவர் திரு. S.V. கனிராஜ் அவர்கள் அனைத்துக் கருத்துக்களையும் தெளிவாக விளக்கி, உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விடையளித்து, தெளிவுரை வழங்கினார்.



மேலும், வருகிற ஏப்ரல் 14ஆம் தேதி சித்திரைத் திருநாளையொட்டி, சங்க உறுப்பினர்கள் அனைவரின் புகைப்படங்களுடன் போஸ்டர்கள் தயாரிக்கப்பட்டு ஒட்டப்படும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இராமநாதபுரம் கிராமத்தில் கலெக்டர் தலைமையில் மனுநீதிநாள் முகாம்

தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டத்திற்குட்பட்ட இராமநாதபுரம் கிராமம் காமராஜர் மண்டபத்தில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரு.ராணி ஸ்ரீ குமார் அவர்கள்முன்னிலையில்மாவட்ட ஆட்சித் தலைவர் .ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் மனுநீதிநாள் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித்தாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் சென்றடைந்து பயனடைய வேண்டும் என அறிவுறுத்தி யதன் அடிப்படையில், கிராமம் தோறும் மனுநீதி நாள் முகாம் உள்ளிட்ட பல்வேறு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அம்முகாமில்



பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில் பல்வேறு கோரிக்கை மனுக்கள் ஏற்பு செய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது மேலும், அரசுத் துறை அலுவலர்கள் அனைவரும் தங்கள்துறை சார்ந்த திட்டங்களை பொது மக்கள் அறிந்திடும் வகையில் எடுத்துரைத்தார்கள் எனவே, பொது மக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள அனைத்து திட்டங்களையும் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், தெரிவித்தார்.

இம்முகாமில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின்மூலம் 02 பயனாளிகளுக்கு மாதம் ரூ.1200/ (வாழ்நாள் முழுவதும்) உதவித் தொகைக்கான ஆணையினையும், வேளாண்மைத் துறை மூலம் 03 பயனாளிகளுக்கு தலா ரூ.4000/ வீதம் ரூ.12,000/ மதிப்பிலான மின்கல தெளிப்பான்களையும், 02 பயனாளிகளுக்கு தலா ரூ.4000/வீதம் ரூ.8000/ மதிப்பிலான சூரிய விளக்குகளையும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 01 பயனாளிக்கு மின்கல பொருத்திய ஸ்பிரேயரையும், 02 பயனாளிகளுக்கு வெண்டை விதைகளையும், 20 பயனாளிகளுக்கு முழுப்புலம் பட்டாமாறுதலுக்கான ஆணையினையும், 11 பயனாளிகளுக்கு உட்பிரிவு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், 20 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளையும், 02 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகளையும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் 01 பயனாளிக்கு ரூ.13,500/ மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளினையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.13,500/மதிப்பிலானநான்கு சக்கர நாற்காலி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோரி தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் வழங்கினார்கள்.

## தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சி பணியாளர்கள் சங்க புதிய கட்டிடம் திறப்பு



மதுரை தல்லாகுளம் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் பொதுப்பணித்துறை மற்றும்நீர்வளத்துறை அமைச்சு பணியாளர்களின் வாழ்க்கை தரம் மேம்படவும் துறையில் பதிவு உயர்வு பொதுநிலை பட்டியல் வெளியிடுதல் தோட்ட கணக்கர் பதவி மாநில சேவையாக்கப்பட வேண்டுதல் முறையில் மாறுதல் வணங்கி காலி பணியிடங்கள் பூர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை செயல்படுத்த புதிய கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டிடத்தின் திறப்பு விழா மாவட்ட தலைவர் சிவக்குமார் தலைமையில் நடைபெறுகிறது. சிறப்பு அழைப்பாளர்களாக மதுரை மண்டல பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர்கள் செல்வராஜன் ரமேஷ் கண்காணிப்பு பொறியாளர் அய்யாசாமி நீர்வளத்துறை முதன்மை பணியாளர்அலுவலர் சேகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

## சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளிடம் கலந்துரையாடல் நிகழ்ச்சி

சிவகங்கை

சிவகங்கை மாவட்டம்க ல்லல் அருகே சுமார் 234 ஏக்கரில் பரந்து விரிந்து செயல்பட்டு வரும் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டுவருகிறது. இந்தநிறுவனத்தில் பயின்றுவரும் வேளாண்மைத்துறை மாணவர்கள் தங்களது படிப்பின் இறுதாதியாண்டில் செய்முறைப்படிப்பாக அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளை சந்தித்து நவீன விவசாய முறைகள் உள்ளிட்ட பல்வேறு விசயங்களைப் பற்றி கலந்துரையாடுவது வழக்கம்

அந்த வகையில் சேது பாஸ்கரா கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களான அதியமான், தினேஷ், செல்வா, ராம் அரவிந்த், கல்யாண கிர்த்திக் ,முனிராஜ், தங்களது கிராமப்புற பயிற்சி அனுபவ திட்டத்தில் இடைகாட்டூர் கிராமத்தில் அங்குள்ள விவசாய பெருங்குடி மக்களுக்கு நவீன விவசாய முறைகளைப்பற்றி அறிவுரைகளை வழங்கினர்






## தேசிய நிலஅளவை தினவிழா தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மதுரை மாவட்ட மையத்தின் சார்பில் ஆலோசனைக்கூட்டம்

தேசிய நிலஅளவை தினவிழா தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மதுரை மாவட்ட மையத்தின் சார்பில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ராஜ்குமார் தலைவை தாங்கினார். முத்து முனியாண்டி முன்னிலை வகித்தார். ரகுபதி பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு நினைவு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது



முக்கிய தீர்மானமாக நில அளவையர்களுக்கு நீதிமன்ற பயிற்சி நிர்வாக பயிற்சி வழங்க வேண்டும் என்று தீர்மானங்கள் இயற்றப்பட்டது. ஓய்வு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஆசை தம்பி மாவட்ட செயலாளர் மணவாலன், ஜெயராஜ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஆரணியில் காச நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துப் பொருட்கள் வழங்கும் விழா.

ஆரணி, ஏப்ரல் 11

ஆரணி அரசு மருத்துவமனையில் காச நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துப் பொருட்கள் வழங்கும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

ஆரணி கோட்டை ரோட்டரி சங்கம் ஆரணி அரசு மருத்துவமனை காச நோய் பிரிவு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து ஆரணி அரசு மருத்துவமனை வளாகத்தில் காச நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் திருவண்ணாமலை மாவட்ட காச



நோய் பிரிவு துணை இயக்குநர் டாக்டர் பி. அசோக் தலைமை தாங்கினார். ஆரணி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ் நந்தினி, எஸ்.வி.நகரம் ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் ஆர்.சுஷ்ருத்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்ட ஆளுநர் வி சுரேஷ் கலந்து கொண்டு காச நோயினால் பாதிக்கப்பட்ட 30 நபர்களுக்கு ரூபாய் 500 ரூபாய் மதிப்புள்ள அரிசி, சத்து மாவு, பயறு வகைகள், பேரீச்சைபழம், வேர்க்கடலைஅடங்கியதொகுப்பு பொருட்களை வழங்கினார். ஏற்பாடுகளை ஆரணி கோட்டை ரோட்டரி சங்க இயக்குனர் டாக்டர் வி.தியாகராஜன் செய்திருந்தார். மேலும் இதில் ஆரணி அரசு மருத்துவமனை முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் ஐ.மோகன், ஆரணி கோட்டை ரோட்டரி சங்க தலைவர் (தேர்வு) பி கோகுல்ராஜ், ரோட்டரி சங்கதலைவர்எஸ்.குமார், செயலாளர் எம்.பழனி, பொருளாளர் எல்.ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோவில் திருவிழா ஜவுளி வியாபாரிகள் சார்பில் அன்னதானம் : டிஎஸ்பி துவக்கி வைத்தார்

ஈரோடு ஏப் 11

ஈரோட்டில் பெரிய மாரியம்மன் கோவில் குண்டம் தேர் திருவிழா நடந்தது. இதையொட்டி அம்மனுக்கு 37 ம் ஆண்டாக பால்குடம் தீர்த்த குடம் எடுத்து வரப்பட்டு அம்மனுக்கு அபிஷேகம் நடைபெற்றது. அப்போது 500க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது . அதன் தொடர்ச்சியாக நேற்று 3000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அசைவ உணவு வழங்கப்



பட்டது. இதை ஈரோடு டவுன் மதுவிலக்கு டிஎஸ்பிசண்முகம்துவக்கி வைத்தார். சினிமா நடிகரும் தயாரிப்பாளருமான அம்மன் டெக்ஸ் நமச்சிவாயம் மாரியம்மன் டெக்ஸ் பழனிச்சாமி, ஜி எல் பேப்ரிக்ஸ் குருபரன், மாதேஸ்வரன் மற்றும் ராமசாமி ஜவுளி வியாபாரிகள், சொக்கநாத வீதி ஜவுளி வியாபாரிகள், மற்றும் வெங்கடாசலம் வீதி ஜவுளி வியாபாரிகள் சார்பாக இந்த அன்னதானம் நடந்தது.

## ஆரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சமரச விழிப்புணர்வு தினம்

ஆரணி, ஏப்ரல் 11.

ஆரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சமரச விழிப்புணர்வு தினம் முன்னிட்டுவிழிப்புணர்வு கூட்டம் மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ஆரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சமரச விழிப்புணர்வு தினம் முன்னிட்டு கூடுதல் மாவட்ட நீதிபதி ஜெயஸ்ரீ தலைமையில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளை சமரசத்தின் மூலமாக உடனடியாக தீர்வு காணலாம் என்றும் அதற்காக உயர்நீதிமன்றத்தில் அறிவுறுத்தப்பட்ட பயிற்சி பெற்ற சமரச வழக்கறிஞர்கள் மூலம் தீர்வு



காணப்படுகிறது என்றும் அதன் வழிமுறைகளை பற்றியும் வழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். இதில் மாவட்ட உரிமையியல் நீதிபதி கோப்பெரும் தேவி, சார்பு நீதிபதி தாவூத் அம்மாள், நீதித்துறை நடுவர் பிரபுநிவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஸ்ரீதர், செயலாளர் தணிகாசலம், மூத்த வழக்கறிஞர்கள் கே.ச ங்கர், வி.வெங்கடேசன், கே.ராஜமூர்த்தி, அரசு வழக்கறிஞர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் சமரச விழப்புணர்வு தினம் முன்னிட்டு ஆரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விழிப்புணர்வு பேரணியினை கூடுதல் மாவட்ட நீதிபதி ஜெயஸ்ரீ கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் வழக்கறிஞர்கள், நீதிமன்ற அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சமரச மையம் மூலம் துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு விநியோகம் செய்தபடி சென்றனர். இப்பேரணி ஆரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலிருந்து புறப்பட்டு ஆரணி வட்டாட்சியர் அலுவலகம், பழைய பஸ்நிலையம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வழியாக சென்று மீண்டும் நீதிமன்ற வளாகத்தை சென்றடைந்தனர்.

## ஆரணி பகுதி மகாவீரர் ஜிநாலயங்களில் மகாவீரர் ஜெயந்தி விழா

ஆரணி, ஏப் 11

ஆரணி பகுதிகளில் உள்ள மகாவீரர்ஜிநாலயங்களில் மகாவீரர் ஜெயந்தி விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆரணி நகரம், ஆரணிப்பாளையம் ஸ்ரீ 1008மகாவீரர்ஜிநாலயத்தில் மகாவீரர் ஜெயந்தி முன்னிட்டு மகாவீரருக்கு பாலபிஷேகம், சந்தன அபிஷேகம் உள்ளிட்ட சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் சுவாமி திருவீதி உலா சென்றது. இதில் அப்ப



குதி ஜைனர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளைபுதுக்காமூர்சிராவக, சிராவகியர்கள் செய்திருந்தனர்.

மேலும் ஆரணி பெரியகடைவீதி பெருமாள் கோயில் அருகில் மகாவீரர் திருவுருவபடம் அமைத்து சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டது. பின்னர் அங்கு சமபந்தி விருந்து நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு விருந்து பரிமாறப்பட்டது. ஏற்பாடுகளை எஸ்.எஸ்.ஜெயின் சங்கம் மற்றும் ஜெயின் நவ்கார் இளைஞர்கள் செய்திருந்தனர்.

மேலும் ஆரணி அடுத்த சேவூர் பகவான் ஸ்ரீ மகாவீரர் ஜிநாலயத்தில் சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் தாலாட்டு விழா ஆகியவை நடைபெற்றது. ஏற்பாடுகளை சேவூர் ஜைன மக்கள் செய்திருந்தனர்.

## பூப்பெய்த மாணவியை தனியாக அமர வைத்த சம்பவம்: கோவை பள்ளியில் காவல்துறை விசாரணை

பொள்ளாச்சி

பொள்ளாச்சி அருகே உள்ள செங்குட்டைபாளையம் கிராமத்தில் தனியார் பள்ளியில், பூப்படைந்த மாணவியை வகுப்பறையின் வெளியில் அமரவைத்து தேர்வு எழுத வைத்த சம்பவம் குறித்து பள்ளி கல்வித்துறை அதிகாரிகள் நேரில் விசாரணை நடத்தி வருகின்றார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த கிணத்துக்கடவு அருகே செங்குட்டைபாளையத்தில் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளி இயங்கி வருகிறது. இங்கு அதே பகுதியைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு படிக்கும் சிறுமி ஒருவர் கடந்த 5ம் தேதி பூப்பெய்தி உள்ளார். இந்நிலையில் தற்பொழுது முழு ஆண்டு தேர்வுகள் நடைபெறுவதால் தேர்வு எழுதுவதற்காக வகுப்பறைக்கு சிறுமி வந்துள்ளார். ஆனால் சிறுமியை வகுப்பறைக்குள் அனுமதிக்காத பள்ளி நிர்வாகம் சிறுமியை 7ம்தேதிஅறிவியல் தேர்வும், 9ம் தேதி சமூக அறிவியல் தேர்வுகளையும் மற்ற மாணவிகளுடன் அமர்ந்து எழுத விடாமல் வகுப்பறை வாசலில் அமர வைத்து எழுத வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தை சிறுமியின் தாய் தனது செல்போனில் பதிவு செய்த வெளியிட்டதால் இந்த வீடியோ காட்சிகள் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இயற்கையாக பெண்களின் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், பள்ளி வகுப்பறைக்குள் சிறுமியை அனுமதிக்காமல் வாசலில் அமர வைத்து தேர்வு எழுத வைத்த தனியார் பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி மக்கள் விடுதலை முன்னணி யினர் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

இதுகுறித்து பொள்ளாச்சி உதவி காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங், கோவை மாவட்ட பள்ளி கல்வி துறை உதவி இயக்குநர் வடிவேல் ஆகியோர், பள்ளி முதல்வர், பள்ளி கண்காணிப்பாளர், பள்ளி தாளாளர் ஆகியோரிடம்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து ஏ.எஸ்.பி. சிருஷ்டி சிங் கூறும்போது, “பள்ளி நிர்வாகம் மற்றும் மாணவியிடம் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் வழக்கமாக தேர்வு எழுதும் இடத்தில் அனைவரும் அமர்ந்து தேர்வு எழுதவைக்கப்பட்டனர். குறிப்பிட்ட அந்த மாணவி மட்டும் பெற்றோர் கோரிக்கையின்படி தான் தனியாக அமர்ந்து தேர்வு எழுதி உள்ளார் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது குறித்து காவல்துறையினருக்கு, பெற்றோர் தரப்பிலிருந்து இதுவரை எவ்வித புகார் வரவில்லை.” என்றார்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் கூறும்போது, “பள்ளி மாணவியை பள்ளியின் வாசலில் அமர்த்தி வைக்கப்பட்டு தேர்வு எழுத வைக்கப்பட்ட சம்பவத்தில், இரண்டு விதமான விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. காவல்துறை சார்பிலும், இரண்டாவது தனியார் பள்ளி என்பதால் தனியார் பள்ளிகளுக்கு என இருக்கும் மாவட்ட கல்வி அலுவலர் சார்பாக பள்ளியின் மேலாண்மை அதிகாரிகளிடம் நோட்டீஸ் வழங்கப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டு இருக்கிறது. விசாரணை முடிந்தபின், அதற்கான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கும் போது, நிச்சயம் அதற்கான சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்,” என தெரிவித்துள்ளார்.



மதுரை மாநகர் பகுதிகளில் பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்கள் சைபர் கிரைம் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து போலீசாரால் மீட்கப்பட்ட 278 செல்போன்களை பொதுமக்களிடம் போலீஸ் கமிஷனர் லோகநாதன் ஒப்படைத்தார்.

## ஓய்வூதியம் உயர்த்தி வழங்க வேண்டும்: ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்க மாநில பொதுச்செயலாளர் பேட்டி

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்ட தலைவர் எஸ். சாம்பசிவம் தலைமையில் கட்டுமான தொழிலாளர்களுக்கு வாரியத்தில் வழங்கப்படும் நல திட்ட உதவிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரவை கூட்டம் அம்மூர் காந்தி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாநில பொது செயலாளர் கோவை என். செல்வராஜ் பேசியதாவது, நடப்பு மானிய கோரிக்கையின் மீது தமிழக அரசு அறிவித்துள்ள கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வு அறை, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை அறிவிப்புகளை வரவேற்கிறோம்.

மேலும் வாரிய தீர்மானத்தின்படி ரூ. 2 ஆயிரம் ஓய்வூதியம் உயர்த்தி வழங்க வேண்டும். கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு தற்போது வழங்கி வரும் 4 லட்சத்தை கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டும் உள்ளிட்ட அறிவிப்புகள் நடப்பு நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்த்திருந்த நிலையில் சற்று ஏமாற்றம் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.



இதில் மாநில பொதுச் செயலாளர் கோவை என். செல்வராஜ், ஆர். துரைசாமி, சி. நந்தினி, மாவட்ட செயலாளர் ஏ.எஸ். சங்கர் மேஸ்திரி, கே.நித்யானந்தம், பி.எஸ். பரமசிவம் ஆகியோர் பேசினர். இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின்மாவட்ட செயலாளர் ஜி.லதா வாழ்த்தி பேசினார். உடன் எஸ்.ஜி.தீபாகுணசேகரன், ஜி. ரவி, சத்தியமூர்த்தி, முருகானந்தம், ஜீவானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக அதிசயம், கிருஷ்ணமூர்த்தி நன்றி உறையாற்றினர்.

## புதுச்சேரியில் நகை மதிப்பீட்டாளர் களுக்கு வங்கி ஊழியர்கள் போன்று அனைத்து சலுகைகளும் வழங்க வேண்டும் சங்க கலந்தாய்வு கூட்டத்தில் தீர்மானம்

புதுச்சேரி தமிழ்நாடு அனைத்து பொதுத்துறை வங்கி நகை மதிப்பீட்டு பணியாளர் சங்கம் சார்பில் கலந்தாய்வு கூட்டம் புதுச்சேரிதமிழ் சங்க வளாகத்தில் நடந்தது நிகழ்ச்சியில் சங்க செயலாளர் சிவகுமார் தலைமை தாங்கினார் நாம் தமிழர் கட்சி புதுச்சேரி தலைமை நிலைய செயலாளர் முத்.அம். சிவகுமார் முன்னிலை வகித்தார் நாம் தமிழர் தொழிற் சங்கப் பேரவை தலைவர்அன்பு தென்னரசன் செயலாளர் சுரேஷ்குமார் இணைச் செயலாளர் ஆல்பட்ரமேஷ் தொழிற்சங்க செயலாளர் தட்சிணாமூர்த்தி பங்கேற்றனர் நிகழ்ச்சியில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டன அவையாதெனில்

நகைமதிபீட்டாளர்களை பணிபாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் வருடத்திற்கு ஒரு முறை ஊக்கத் தொகை வழங்க வேண்டும் வைப்புத் தொகை (PF) பிடித்தம், மருத்துவ காப்பீடு (ESI) பிடித்தம், ஓய்வு கால ஊதியமாக வழங்க வேண்டும்

நகை மதிப்பீட்டாளர் பதவி (cader strength) பணி நிரந்திர நிலைத்தன்மை உருவாக்கி பணிநிரந்திரம் செய்திட வேண்டும்.

அத்தியாவசிய விலையேற்றம் காரணமாகவும், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பணி செய்வதால் நகைமதிப்



பீட்டாளர்களுக்கு குறைந்த பட்சம் மாத ஊதியமாக ரூபாய் 60,000/ வழங்க வேண்டும்.

ஊழியர்கள், அதிகாரிகளுக்கு கிடைக்கக் கூடிய அனைத்து சலுகைகளும் நகைமதிப்பிட்டளாரர்களுக்கும் வழங்க வேண்டும்.

இந்த கோரிக்கைகள் நாம் தமிழர் தொழிற்சங்க பேரவை கடிதம் வாயிலாக வலியுறுத்தி கோரிக்கைகளை தலைமை மண்டல அலுவலகத்திற்க்கு அனுப்ப உள்ளது. தொழிலாளர் சட்டத்தின் அடிப்படை விதிமுறைகளை கடைபிடிக்காத வங்கி நிர்வாகம் அவர்களை எதிர்த்து தொழிலார் நல ஆனையத்தை நாடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்த உள்ளது. இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்நிகழ்ச்சி ஏற்பாடுகளை நாம் தமிழர் கட்சி தொழிற் சங்க பேரவையினர் செய்திருந்தனர்

## அதிகத்தூரில் ஏ.எப்.சி நடத்திய மூன்றாம் ஆண்டு மாபெரும் ஒரு நாள் ஐவர் கால்பந்து போட்டி

அதிகத்தூரில் ஏ.எப்.சி நடத்திய மூன்றாம் ஆண்டு மாபெரும் ஒரு நாள் ஐவர் கால்பந்து போட்டியில் இரண்டாவது பரிசை மேல்நல்லாத்தூர் ஏ.பி.சி நீல நிற கால்பந்துக் குழு அணி வெற்றி பெற்று சாதனை : திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாரத ஜனதா கட்சி ஊடக பிரிவு மாவட்ட செயலாளர் இரா.பிரசாத் கோப்பை மற்றும் ரொக்க பரிசையும் ரூபாய் 20.000வழங்கி, பாராட்டு

அதிகத்தூரில் ஏ.எப். ஏ.எப்.சி நடத்திய மூன்றாம் ஆண்டு மாபெரும் நடைபெற்றது.இப்போட்டிக்கான நுழைவு கட்டணம் ரூ.3001 மற்றும் ஒவ்வொரு அணியும் ரூ.1500 என நிர்ணயிக்கப்பட்டது. இப்போட்டிகளுக்கு முதல் பரிசு



ரூ.30,001,இரண்டாம் பரிசு ரூ.20,001,மூன்றாம் பரிசு ரூ.10,001 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இப்போட்டியில் மொத்தம் 16 அணிகள் கலந்து கொண்டன. போட்டிகளின் முதல் சுற்று முடிவில் இரண்டாவது சுற்றுக்கு 8 அணிகள் தகுதி பெற்று விளையாடின.இரண்டாவது சுற்று முடிவில் மூன்றாவது சுற்றுக்கு:4 அணிகள் தகுதி பெற்று விளையாடின. அதன் முடிவில் இறுதிப் போட்டியில் இரண்டு அணிகள் மோதின.

போட்டியின் முடிவில் முதல் பரிசை வெங்கத்தூர் அணியும், இரண்டாவது பரிசை ஏ.பி.சி நீல நிற கால்பந்துக் குழு மேல்நல்லாத்தூர் அணி வெற்றி பெற்று சாதனை படைத்தன.

முதல் பரிசைவென்ற வெங்கத்தூர் அணிக்கு தேசிய சிலம்பம் வீரர் வி. மோகன் வேல் என்கின்ற ஆகாஷ் கோப்பை மற்றும் ரொக்க பரிசையும், இரண்டாவது பரிசை வென்ற மேல்நல்லாத்தூர் ஏ.பி.சி நீல நிற கால்பந்துக் குழு அணிக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாரத ஜனதா கட்சி ஊடக பிரிவு மாவட்ட செயலாளர் இரா.பிரசாத் கோப்பை மற்றும் ரொக்க பரிசையும் வழங்கி,பாராட்டி சிறப்பித்தார்.

## திருத்துறைப்பூண்டி சுதந்திர போராட்ட தியாகி.பி.சீனிவாசராவ்க்கு மரியாதை

திருவாரூர், ஏப்.11

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சுதந்திர போராட்ட தியாகி.பி.சீனிவாசராவ் அவர்களின் 118 வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்க்கு திருவாரூர் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், திருத்துறைப்புண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட தியாகி.பி.சீனிவாசராவ் அவர்களின் நினைவு மண்டபத்தில் அவரது 118 வது பிறந்தநாள் விழா அரசின் சார்பில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், தலைமையில் கொண்டாடப்பட்டது. சுதந்திர போராட்ட தியாகி.பி.சீனிவாசராவ் அவர்களின் நினைவு மண்டபத்தில் அவரது திருவுருவப்படத்திற்க்கு திருவாரூர் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நாகப்பட்டினம் நாடாளு மன்ற உறுப்பினர் திரு.வை. செல்வராஜ் அவர்கள், திருத்துறைப்புண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர்.

# திருச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம்



திருச்சி, ஏப்.11

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தும் உரிமைகள் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் மா.பிரதீப் குமார். தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி, முசிறி, துறையுர் மற்றும் மணப்பாறை ஆகிய 4 இடங்களில் மாற்றுத்திறனாளி களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையங்களும், வட்டார அளவில் 18 ஓரிட சேவை மையங்களும் மற்றும் குக்கிராமங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளும் எளிதில் அணுகும் வகையில் 100 முதல் 150 மாற்றுத்திறனாளிகளக்கு ஒரு அருகாமை மையம் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, மாற்றுத்திற னாளிகளுக்கான கணக்கெடுப்பு 2023ன் படி இம்மாவட்டத்தில் ஒரு மாற்றுத்திறனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்ற உன்னத நோக்கத்தில் மாவட்டம் முழுவதும் மகளிர் திட்டத்தின் ஊரக, நகாப்புற வாழ்வாதார இயக்கத்தின் ஊசு, ஊளுவு பணியாளர்களை கொண்டு செப்டம்பர் 29 முதல் ஆழடிடைந யு மூலம் கணக்கெடுப்பு துவங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரண்டு உட்கோட்ட (முசிறி மற்றும் மணப்பாறை) மற்றும் வட்டார அளவில் பத்து மாற்றுத்திறனாளிகளுக்கான ஓரிட ஒருங்கிணைந்த சேவை மையங்கள் பிப்ரவரி 27 அன்று காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சேவை மையங்களின் வாயிலாக இயன்முறை சிகிச்சை, செயல்முறை சிகிச்சை, சிறப்பு கல்வி, உளவியல் ஆலோசனை வழங்குதல், கண்விழி ஒள பரிசோதனை செய்தல், பேச்சு மொழி பயிற்சி வழங்குதல் மற்றும் நடமாடும் ஊர்தி சேவை மூலமும் மேற்கண்ட சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

# போதைப் பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பயன்படுத்தலுக்கு எதிரான வாராந்திர ஆய்வுக்கூட்டம்



தென்காசி, ஏப்.11

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் போதைப் பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பயன்படுத்தலுக்கு எதிரான வாராந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் போதைப்பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பயன்படுத்தலுக்கு எதிரான வாராந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித்ததாவது,

அரசு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொளி ஆய்வுக்கூட்டத்தில் போதை மற்றும் புகையிலை பொருட்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு துறையினரால் கைப்பற்றுகை செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட போதைபொருட்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் பயன்பாடு குறித்து சுய விவரமின்றி புகார் அளித்திட தமிழக அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட மொபைல் செயலி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், உதவி ஆணையர்(கலால்) ராமச்சந்திரன், நியமன அலுவலர் (உணவு பாது காப்பு அலுவலர்) சசி தீபா, மற்றும் தென்காசி மாவட்ட அனைத்து துணை காவல் கண்காணிப்பாளர்கள், அனைத்து போதைப் பொருள் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிஆர்டிசி ஒப்பந்த ஊழியர்கள் 2வது நாளாக மேற்கொண்ட வேலைநிறுத்தம் காரணமாக புதுச்சேரியில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படவில்லை



புதுவை சாலை போக்குவரத்து கழகத்தில் ( பிஆர்டிசி), 40 டவுன் பஸ்கள் உட்பட மொத்தம் 96 பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து கழக விதிப்படி ஒரு பஸ்ஸுக்கு டிரைவர், கண்டக்டர், மெக்கானிக் மற்றும் நிர்வாக ஊழியர்கள் என மொத்தம் 7 பேர் இருக்க வேண்டும். இந்த நிலையில் நிரந்தர ஊழியர்கள் பெரும்பாலானோர் பணி ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், இருக்கிற சொற்ப ஊழியர்களில் பலரும் அரசியல் செல்வாக்கில் அயல் பணியில் உள்ளனர்.

தற்போது ஒப்பந்த தொழிலாளர்களை கொண்டு குறைந்த அளவில் பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த ஊழியர்கள்தங்களைபணி நிரந்தரம் செய்ய வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். பல கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தியும் ஒப்பந்த ஊழியர்கள்பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. இதனால் பிஆர்டிசி ஒப்பந்த ஊழியர்கள் நேற்று (ஏப்.9) முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர். இன்று 2வது நாளாக போராட்டத்தை தொடர்ந்தனர்.

இதனால் பிஆர்டிசி மூலம் நகரம், கிராமப்புற பகுதிகளுக்கு இயக்கப்படும் பஸ்கள் இயக்கப்படவில்லை. நிரந்தர ஊழியர்கள் மூலம் சில பஸ்கள் மட்டும் இயக்கப்பட்டது. இதனால் கிராமப்புற மக்கள் அவதியடைந்தனர். இந்த நிலையில் பிஆர்டிசிக்கு புதிதாக 75 பஸ்கள் வாங்கி, புதிய வழித்தடங்களில் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதையொட்டி கூடுதல் டிரைவர், கண்டக்டர்கள்தேவை உள்ளதால், பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை நியமிக்க நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

சுயேச்சை எம்.எல்.ஏ.நேரு எச்சரிக்கை: வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களைச் சந்தித்த பின்பு முதல்வர் ரங்கசாமி ஆதரவு சுயேச்சை எம்.எல்.ஏ. நேரு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“புதுவை மாநில சாலை போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களாக 10 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 250க்கும் மேற்பட்டவர்கள் சொற்ப ஊதியத்தில் பணி புரிந்து வருகிறார்கள். இவர்கள் இரவு, பகல் பாராமல் பணி செய்து கொண்டு வருகிறார்கள். இவர்கள் பணிநிரந்தரம் கேட்டு பல முறை போராடியுள்ளனர்.

நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்காமல் அலட்சியப்படுத்துகிறது. இதனால் ஊழியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த நிலையில் அவர்களை பழிவாங்கும் விதமாக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிகளுக்கு புதியதாக ஒப்பந்த ஊழியர்களை நியமிக்க அறிவிப்பாணை வெளியிட்டுள்ளனர். 10 ஆண்டு பணிபுரியும் ஊழியர்களை பணிநிரந்தரம் செய்த பிறகு புதியதாக ஊழியர்களை நியமிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும். இதையும் மீறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அலட்சியத்துடன் செயல்பட்டால் ஊழியர்களின் நியாயமான போராட்டத்தை பொதுநல அமைப்புகளுடன் முன்னின்று நடத்துவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கல்லூரிகளில் படிப்பதற்கு முன்வர வேண்டும்: கலெக்டர் அறிவுறுத்தல்



கன்னியாகுமரி, ஏப்.11

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகல்வித்துறை சார்பில் உயர்கல்வி வழிகாட்டிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாம் நாகர்கோவில் புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கில் நடைபெற்றது. இவ்வழிகாட்டிக்குழு கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா கலந்துகொண்டு தலைமையாசிரியர்கள், உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுவினர்களிடையே பேசுகையில்


தமிழ்நாடு முதலமைச்சர் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவதோடு, மேற்படிப்பு படிப்பதற்காக வழிகாட்டுதல் முகாம்கள் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள 12ம் வகுப்பு முடித்த பள்ளி மாணவ மாணவியர்கள் மேற்படிப்பு படிப்பதற்கு பல்வேறு வழிகாட்டு முகாம்கள் நடைபெற்று வருகிறது. இம்முகாம்களை சிறப்பாக வழிநடத்தி வருகிற மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், வழிகாட்டிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுகிறேன். நாம் அனைவருடைய நோக்கம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 100 சதவீதம் எட்டுவதேயாகும். மேலும் 12ம் வகுப்பு தேர்வுமுடித்த மாணவ மாணவியர்கள் அடுத்த கட்டமாக எந்த மேற்படிப்பை தொடரலாம் என்பதை அவர்கள் தேர்வு செய்ய வேண்டும்.

பெற்றொர்கள் தங்களுடைய பிள்ளைகளின் எண்ணங்களை கேட்கமால் வெளியூர்களில் மேற்படிப்பு படிக்க வைக்கிறார்கள். இந்த நாட்களில் மாணவர்கள் அடிப்படை தேவைகளை கல்லூரி நிர்வாகத்திற்கு செலுத்த முடியாமால், மனஉளைச்சலுக்கு ஆளாகி, மேற்படிப்பை தொடரமால் முடியமால் இடைநிற்கின்றன. உள்ளூர் கல்லூரிகளில் பயிலும் போது விடுதி செலவுகள், பேருந்து கட்டணம் உள்ளிட்ட பல்வேறு செலவுகளை தவிர்த்து, கல்லூரி படிப்பை எளிதாக மேற்கொள்ள முடியும்.

எனவே பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இதுபோன்ற நம்மிடம் இருக்கும் மாணவர்களுக்கு பெற்றோராக செயல்பட்டு சரியான உயர் கல்வி வழிகாட்டுதலை அனைத்து மாணவருக்கும் வழங்கிடுதல் நமது தலையாய பணியாகும். பன்னிரண்டாம் வகுப்பு படித்த எந்த ஒரு மாணவனும் உயர் கல்வியில் செல்ல முடியாத நிலை இயலாத வண்ணம் அனைவரும் இதில் தனிக் கவனம் செலுத்தி பணியாற்றுதல் வேண்டும். உயர்கல்வி பயில்வதற்கான குறிக்கோள் இன்றி இருக்கும் மாணவர்களை சரியாக அடையாளம் கண்டு அவர்களுக்கான உரிய வழிகாட்டுதல் வேண்டும். இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர். அழகுமீனா பேசினார்கள்.

# ஏப்.15 முதல் மீன்பிடி தடைக்காலம்: ராமநாதபுரத்தில் 2000 விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாது



ராமேசுவரம்: தமிழகத்தில் இரண்டு மாத கால மீன்பிடித் தடைக்காலம் வரும் ஏப்ரல் 15ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 2 ஆயிரம் விசைப் படகுகள் கடலுக்குச் செல்லாது.

தமிழகத்தின் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடற்பகுதிகளில் ஏப்ரல், மே, ஜுன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலமாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது. மீன்வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்தக் காலகட்டத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. அதன்படி தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான 61 நாள் மீன்பிடித் தடைக்காலம் ஏப்ரல் 15ம் தேதி அமலுக்கு வருகிறது. ஜுன் 14 வரை 61 நாட்களுக்கு இந்த தடை அமலில் இருக்கும்.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்சிம்ரன்ஜீத் சிங் கலோன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983ன் கீழ், தமிழகத்தின் கிழக்கு கடற்பகுதியில் மீன் இனப்பெருக்க காலத்தை கருத்திற்கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டும், 2025ம் ஆண்டு ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலான இரண்டு மாத காலங்கள் விசைப்படகுகள் மற்றும்இழுவைப்படகுகளை உபயோகப்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்படுகிறது. அதன்படி விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மேற்கூறிய காலக ட்டங்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லக் கூடாது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடைக்காலத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், கீழக்கரை, ஏர்வாடி, வாலிநோக்கம், தொண்டி, எஸ்.பி. பட்டிணம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் 2 ஆயிரம் விசைப்படகுகள் மீன்பிடி இறங்குதளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். மேலும் தடைக்கால நிவாரணத் தொகையாக ராமநாதபுரம் மாவட்டத்தில் 33 ஆயிரம் மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ 8,000 தடைக்கால நிவாரணமாக வழங்கப்பட உள்ளது.

# தேனி மாவட்டத்தில் சமரச விழிப்புணர்வு பேரணி




தேனி, ஏப்.11

தேனி மாவட்டம், மாவட்ட சமரச மையம் மாவட்ட நீதிமன்றம் தேனி சார்பாக சமரச தீர்வு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை முதன்மை மாவட்ட நீதிபதி திரு.ஸ்வர்ணம்.நடராஜன் அவர்கள் இன்று (09.04.2025) துவக்கி வைத்து, பேரணியில் பங்கேற்றார்.

இப்பேரணியில் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு மாநில சமரச மையத்தின் அறிவுறுத்தல் படி ஒவ்வொரு ஆண்டும் 09.04.2025 அன்று சமரச நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட நீதிமன்றம் மற்றும் தாலுகா நீதிமன்ற வளாகங்களில் சமரச தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு நடுநிலையான சமரசர் முன்னிலையில், இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி, தங்களுக்கான தீர்வை தாங்களே எட்டும் ஒரு எளிமையான தீர்வு முறை ஆகும். பாகப்பிரிவினை வழக்குகள், ஜீவனாம்ச வழக்குகள், பண வழக்குகள், குடும்ப நல வழக்குகள், தொழில் தகராறு வழக்குகள், காசோலை வழக்குகள் என குற்றவியல் வழக்குகள் தவிர்த்த பிற வழக்குகளை சமரச முறையில் தீர்வு காணலாம். இதன்மூலம் அதிகபட்சம் 90 நாட்களில் தீர்வு காணப்படுகிறது. சமரச மையத்தில் சுமூகத் தீர்வு காணப்படுவதால் முழு நீதிமன்ற கட்டணத்தையும் திரும்ப பெறலாம். சமரச மையத்தில் நடைபெறும் அனைத்து பேச்சுவார்த்தைகளும் எவ்வகையிலும் பதிவு செய்யப்பட மாட்டாது, ரகசியம் காக்கப்படும். மிக எளிய முறையில் வேகமாகவும் பண விரயம் இல்லாமல் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உடனடியாக தீர்வு காணப்படுகிறது. சமரச மையத்தில் காணப்படும் தீர்வு இறுதியானது இதற்கு மேல் முறையீடு கிடையாது என முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் தெரிவித்தார்.

எனவே இதுகுறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடைபெற்றது. பேரணியில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள், சட்டக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணி பங்களா மேடு பகுதியில் தொடங்கி, பழைய பேருந்து நிலையம் வழியாக பழனிசெட்டிபட்டி சாலையில் உள்ள கொட்டக்குடி பாலம் வரை சென்று நிறைவு பெற்றது. பேரணியில் பங்கேற்றவர்கள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு பேரணியில் பங்கேற்றனர். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மின்னணு திரை வாகனம் மூலம் சமரச தீர்வு வழக்குகள் குறித்து விழிப்புணர்வு குறும்படங்கள் காண்பிக்கப்பட்டது.

# உங்க கட்சிக்காரர்களிடம் இல்லாத பள்ளிகளா? ஏன் மக்களை வதைக்கிறீங்க? திமுகவால் கொந்தளித்த அண்ணாமலை



சென்னை

"உங்கள் கட்சிக்காரர்களிடம் இல்லாத கல்லூரிகளா, பள்ளிகளா? எதற்காக, சாமானிய மக்களை வதைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை திமுகவுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே நடைபெற உள்ள நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ள நிலையில், அதற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் கல்லூரி மற்றும் தனியார் பள்ளிகளில் இயங்கும் பேருந்துகளை, இந்தநிகழ்ச்சிக்குஅனுப்பி வைக்க வேண்டும் என்றும்,திருவள்ளூர்மாவட்ட ஆட்சியர் சார்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் சுற்றறிக்கை ஒன்றை பதிவிட்டு அதில், "வரும் 19.04.2025 அன்று, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் உள்ள ஆண்டார்குப்பம் கிராமத்தில் ஒரு நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க இருப்பதாகவும், அதற்காக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் கல்லூரி மற்றும் தனியார் பள்ளிகளில் இயங்கும் பேருந்துகளை, இந்த நிகழ்ச்சிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும்,திருவள்ளூர்மாவட்ட ஆட்சியர் சார்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

திமுக அரசு நடத்தும் நிகழ்ச்சிகள் என்றாலே, பொதுமக்கள், வணிக நிறுவனங்களிடம் வசூல் வேட்டை முதற்கொண்டு, கூட்டத்தை காட்டுவதற்காக, நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான ஊதியம் தரமாட்டோம் என்று கூறி ஏழை எளிய மக்களை மிரட்டி அழைத்து வருவது, தனியார் பள்ளி, கல்லூரிகளை மிரட்டி வாகனங்களை வாங்குவது என, அடாவடித்தனம் செய்வதையே வாடிக்கையாக வைத்திருக்கிறது திமுக. தென்காசியில், அரசு மருத்துவர்களிடமே கட்டாய வசூல் வேட்டை நடத்தப்பட்ட செய்திகள் நேற்று வெளிவந்தன. இப்படி, பொதுமக்களுக்குத் தொடர்ந்து இன்னல்களைக் கொடுக்கும் திமுகவின் இந்த அராஜகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம். உங்கள் கட்சிக்காரர்களிடம் இல்லாத கல்லூரிகளா, பள்ளிகளா? எதற்காக, சாமானிய மக்களை வதைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மேக்கேதாட்டில் அணை கட்டுவதை தடுக்க தமிழக சட்டசபையில் கோரிக்கை



நாமக்கல். ஏப்.11

கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டில் அணை கட்டுவதற்கு அனுமதி வழங்க கூடாது என நடப்பு சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே தீர்மானம் இயற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என தமிழக முதலமைச்சருக்கு நாராயணசாமி நாயுடுவின் விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

இது தொடர்பாக உழவர் பெருந்தலைவர்நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ஆர்.வேலுசாமி தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது :

கர்நாடக அரசு மேக்கேதாட்டில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான புர்வாங்க பணிகள் அனைத்தும் நிறைவடைந்தது என்று கூறி, அணையை கட்டுவதற்காக 202526 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.9,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கர்நாடக அரசு தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையிலும், தமிழகத்தில் உள்ள 22 மாவட்டங்களின் குடிநீர் ஆதாரத்தை சீர்குலைத்து குடிநீர் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் முயற்சி செய்து வருகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, தமிழக டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் தமிழகத்தில் உள்ள 22 மாவட்டங்களின் குடிநீர் தேவையை பாதுகாக்கவும், கர்நாடக அரசு மேக்கேதாட்டில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை

முறியடிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் மேக்கேத்தாட்டில் அணை கட்ட எதிர்ப்பு தெரிவித்தும், மத்திய அரசு கர்நாடக அரசுக்கு மேக்கேதாட்டில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு அனுமதி வழங்க்கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றி அந்த தீர்மானத்தை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பி வைக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் தங்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த மனுவில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ஆர். வேலுசாமி கூறியுள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

11.4.2025

# மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை, ஏப்.11

வக்பு வாரிய சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது:

நாடாளுமன்றத்தில் சமீபத்தில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை மத்திய அரசு நிறைவேற்றியது. இஸ்லாமியர்களுக்கு எதிரானது இந்த சட்ட திருத்தம் என்று பல்வேறு கட்சிகள் இந்த சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதன்படி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கட்சியின் மாவட்ட செயலாளர் மோகன் குமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கட்சியினர் பங்கேற்று மத்திய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

# மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு மயிலாடுதுறையில் ஜெயின் சமூகத்தினர் ஊர்வலம் மற்றும் சுமதிநாத் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு



மயிலாடுதுறை, ஏப்.11

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் ஜெயின் சமூகத்தினர் குறிப்பிட்ட அளவில் வசித்து வருகின்றனர். ஜெயின் சமூகத்தின் 24 ஆவது தீர்த்தங்கரரான மகாவீர் ஜெயின் பிறந்தநாள் விழா சைத்ர மாதம் திரயோதசி திதியன்று ஜெயின் சமூகத்தினரால் கடைபிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு ஜெயின் சங்கத்திலிருந்து அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்கரர் உற்சவ மூர்த்தியை முக்கிய வீதிகள் வழியாக ஆண்கள் பெண்கள் ஊர்வலமாக ஆடிப்பாடி எடுத்து வந்தனர். மகாதான வீதி கச்சேரி சாலை வழியாக ஜெயின் ஆலயமான சுமதி நாத் ஆலயத்தை ஊர்வலம் வந்து அடைந்தது. அங்கு பால் தீர்த்தம் தெளித்து சுமதிநாத் சுவாமிக்கு தீபாராதனை செய்து வழிபாடு செய்யப்பட்டது. இதில் ஆண்கள் பெண்கள் பங்கேற்று ஆடி பாடி வழிபாடு செய்தனர்.

# பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் ஈரோடு கோரல் மேனுஃபேக்சரிங் வொர்க்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஈரோடு, ஏப்.11

கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் கோரல் மேனுஃபேக்சரிங் வொர்க்ஸ் (சி.எம். டபிள்யூ) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்லூரி முதல்வர் முனைவர்.வி.பாலுசாமி, சி.எம்.டபிள்யூவின் மனித வள பொது மேலாளர் ஆர்.சிவராம் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்துறை பயிற்சி ஆகியவற்றில் ஒத்துழைப்பை வளர்ப்பதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் விழாவில், கல்லூரியின் துணை முதல்வர் ஆர்.பரமேஸ்வரன், ட்ரிப்பில் ஈ துறைத்தலைவர் எம்.கார்த்திக், துறைப்பேராசிரியர் என்.செந்தில்நாதன், இணைப் பேராசிரியர் முனைவர் டி.லோகேஸ்வரன், உதவிப் பேராசிரியர் டி.பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதிய வழித்தடங்களுக்கு மினி பேருந்து இயக்க செயல்முறை ஆணை பெற்றவர்களுடனான ஆலோசனைக்கூட்டம்



விழுப்புரம், ஏப்.11

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விழுப்புரம் மாவட்டத்தில் புதிய வழித்தடங்களுக்கு மினி பேருந்து இயக்க செயல் முறை ஆணை பெற்றவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டத்தில், புதிய வழித்தடங்களுக்கு மினி பேருந்து சேவை இயக்குவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு ஏற்கனவே செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டது. இதில், விழுப்புரம் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டு குட்பட்ட 41 வழித்தடங்களுக்கு செயல்முறை ஆணை பெற்றவர்களில் 20 வழித்தடங்களுக்கு மினி பேருந்து சேவைக்கான பேருந்துகள் தயார் நிலையில் உள்ளது.

அதேபோல், திண்டிவனம் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டிற்குட்பட்ட 63 வழித்தடங்களுக்கு செயல்முறை ஆணை பெற்றவர்களில் 26 வழித்தடங்களுக்கு மினி பேருந்து சேவைக்கான பேருந்துகள் தயார் நிலையில் உள்ளது. மேலும், மீதமுள்ள வழித்தடங்களுக்கு செயல்முறை ஆணை பெற்றவர்களிடம் மினி பேருந்து தயார் நிலையில் இல்லாமல் இருப்பதற்கான காரணத்தினை கேட்டறிந்ததுடன், ஒருவார காலத்திற்குள் மீதமுள்ள வழித்தடங்களுக்கு மினி பேருந்துகள் இயக்கிடும் வகையில் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

# சோனா தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் கலை விழா



சேலம், ஏப்.11

சேலம் சோனா கல்லூரியில் தேசிய அளவில் கல்லூரி மாணவர்களுக்கான கலை விழா போட்டிகள் வருகின்ற ஏப்ரல் மாதம் 17ம் தேதி கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் கல்லூரி மாணவர்களுக்கான புகைப்படம் எடுத்தல், பாடல், ஃபேஷன் ஷோ, நடனம், குறும்படம் போன்று பல பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த போட்டிகளில் பங்கேற்க அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவர்களுக்கு அழைப்புகள் விடப்பட்டுள்ளது. மேலும் தேசிய அளவில் 100க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். கல்லூரி மாணவர்களின் தனி திறன்களை அறிந்து அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இதுபோன்றபோட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த போட்டிகளில் வெற்றி பெரும் மாணவ மாணவிகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். எனவே இந்த வாய்ப்பினை கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திக்கொள்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இந்த போட்டிகளின் இறுதி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்க உள்ளனர் என சோனா கல்லூரியின் முதல்வர் எஸ்.ஆர். ஆர்.செந்தில்குமார் கூறினார்.

போட்டியின் விதிமுறைகளை பற்றி முதன்மை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ரேணுகா எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சிகான (க்ரிவாஸ்'25) போஸ்டர் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வின் போது ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செந்தில்வடிவு மற்றும் மாணவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தேன்கனிக்கோட்டை, அருள்மிகு சௌந்தர்யவல்லி உடனுறை பேட்டராயசுவாமி திருக்கோவில் திருத்தேரோட்டம்

ஓசூர், ஏப்.11

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, அருள்மிகு சௌந்தர்ய வல்லி உடனுறை பேட்டராயசுவாமி திருக்கோவில் திருத்தேரோட்டத்தை மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஓசுர்), டி.ராமசந்திரன் (தளி), ஓசுர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் வடம் பிடித்து துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தேன்கனிக்கோட்டை பேரூராட்சி தலைவர் டி.ஆர்.சீனிவாசன், இந்து சமய அறநிலையங்கள் துறை உதவி ஆணையர் வெ.இராமுவேல், துணை காவல் கண்காணிப்பாளர் ஆனந்தராஜ், தேன்கனிக் கோட்டை வட்டாட்சியர் கங்கை, தேன்கனிக் கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மஞ்சுநாத், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் சீனிவாசன், மற்றும் அறநிலையங்கள் துறை அலுவலர்கள், பேட்டராயசாமி திருக்கோயில் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

# நானியின் ஹிட் 3 டிரெய்லர் ரிலீஸ் தேதி அறிவிப்பு




தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. 'சூர்யாவின் சனிக்கிழமை' படத்தை தொடர்ந்து நானி, 'ஹிட் 3' படத்தில் நடித்து வருகிறார். கே.ஜி.எப் நடிகை ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தை பிரபல இயக்குனர் சைலேஷ் கொலானு இயக்குகிறார்.

இப்படத்தின் முதல் இரண்டு பாகங்கள் பெரிய ஹிட் அடித்ததைத் தொடர்ந்து மூன்றாம் பாகம் தயாராகி வருகிறது. பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகும் இப்படம் வருகிற மே மாதம் 1ம் தேதி திரைக்கு வருகிறது.

ஏற்கனவே இப்படத்தின் முதல் பாடலான 'காதல் வெல்லுமா' வெளியாகி வைரலானது.

இந்நிலையில் 'ஹிட் 3' படத்தின் டிரெய்லர் வருகிற 14ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு புதிய போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# வைரலாகும் குடும்பஸ்தன் 75வது நாள் கொண்டாட்ட புகைப்படங்கள்




தமிழ் சினிமாவில் 'ஜெய் பீம், லவ்வர், குட் நைட்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் மணிகண்டன். இவரது நடிப்பில் கடந்த ஜனவரி மாதம் 24ந் தேதி வெளியான படம் 'குடும்பஸ்தன்'. இப்படத்தை சினிமாக்காரன் நிறுவனம் தயாரிப்பில் நக்கலைட்ஸ் யூடியூப் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியிருக்கிறார். இந்த படத்தில் மணிகண்டன் உடன் இணைந்து சான்வி மேக்னா, குரு சோமசுந்தரம், ஆர் சுந்தர்ராஜன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இந்த படத்திற்கு வைஷாக் இசையமைத்துள்ளார்.

மிடில் கிளாஸ் குடும்பத்தில் இருக்கும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்கள் சுவாரசியங்கள் என அனைத்தையும் இந்த திரைப்படத்தில் காட்சிப்படுத்தி இருக்கின்றனர். இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

மக்களால் கொண்டாடப்பட்டு மாபெரும் அளவில் வெற்றியடைந்துள்ள குடும்பஸ்தன் திரைப்படம் 75வது நாளை கடந்து வெற்றிநடை போட்டு வருகிறது.. இப்படம் உலக அளவில் சுமார் ரூ.30 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படம் ஜீ5 ஓ.டி.டி தளத்தில் வெளியானது.

இந்நிலையில் படத்தின் வெற்றியை படக்குழுவினர் கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். படத்தின் 75வது நாள் கொண்டாட்ட புகைப்படங்களை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# "ஹவுஸ் மேட்ஸ்" படத்தை வெளியிடும் சிவகார்த்திகேயன்

நடிகராக மட்டுமில்லாமல் தயாரிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார் சிவகார்த்திகேயன். சிவகார்த்திகேயன் புரோடக்ஷன்ஸ் சார்பாக வாழ் , குரங்கு பெடல் , கொட்டுக்காளி , கனா ஆகிய திரைப்படங்கள் வெளியாகி ரசிகர்களை கவர்ந்துள்ளன. தற்போது சிவகார்த்திகேயன் தயாரிப்பு நிறுவனம் சார்பாக மற்றொரு படம் வெளியாக இருக்கிறது. தற்போது இவர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் மதராஸி படத்திலும், சுதா கொங்கரா இயக்கத்தில் பராசக்தி படத்திலும் நடித்து வருகிறார்.

பேண்டஸி ஹாரர் காமெடி படமாக உருவாகி இருக்கும் "ஹவுஸ் மேட்ஸ்". கதையின் நாயகனாக தர்ஷன் நடித்திருக்கிறார் . இவருடன் மிக முக்கியமான கதாப்பாத்திரத்தில் காளி வெங்கட் நடித்திருக்கிறார்.

இவர்களுடன் இணைந்து அர்ஷா சாந்தினி பைஜூ , வினோதினி , தீனா , அப்துல் லீ , மாஸ்டர் ஹென்ரிக் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர்.ராஜவேல் எழுதி , இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தை விஜய பிரகாஷ் தயாரித்துள்ளார். இத்திரைப்படத்தை ப்ளே ஸ்மித் நிறுவனமும் சௌத் ஸ்டுடியோஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளது.

தற்போது இத்திரைப்படத்தை பார்த்த முன்னணி நடிகர் மற்றும் தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன் படக்குழுவை வாழ்த்தி, பாராட்டியுள்ளார். மேலும் இப்படத்தின் வெளியீட்டு உரிமையை கைப்பற்றி தனது தயாரிப்பு நிறுவனமான சிவகார்த்திகேயன் புரொடக்சன்ஸ் மூலம் உலகம் முழுவதும் விரைவில் வெளியிட உள்ளார்.

"ஹவுஸ் மேட்ஸ்" படத்தை பார்த்ததாகவும் படத்தின் ஒவ்வொரு சின்ன சின்ன விஷயங்களும் தனக்கு ரொம்ப பிடித்திருந்ததால் இந்த படத்தை வழங்குவதாக சிவகார்த்திகேயன் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் தர்ஷன் தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான ரஜினி முருகன் என்ற படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அதன் பின்னர் இவர் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் வெளியான 'கனா' படத்தில் கதாநாயகனாக அறிமுகமானார். அதைத் தொடர்ந்து தும்பா படத்திலும் கதாநாயகனாக நடித்திருந்தார். மேலும் அஜித்தின் துணிவு, சிவகார்த்திகேயனின் அயலான் போன்ற படங்களிலும் நடித்திருந்தார்.

# ஐ.பி.எல். கிரிக்கெட்: சரிவில் இருந்து மீளுமா சென்னை அணி? கொல்கத்தாவுடன் இன்று மோதல்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் 25வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்சை எதிர்கொள்கிறது.

5 முறை சாம்பியனான சென்னை அணி நடப்பு சீசனில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறி வருகிறது. உள்ளூரில் நடந்த தொடக்க ஆட்டத்தில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தி வெற்றிகரமாக தொடங்கிய சென்னை அணி அதன் பிறகு தொடர்ச்சியாக 4 ஆட்டங்களில் (பெங்களூரு, ராஜஸ்தான், டெல்லி, பஞ்சாப் அணிகளிடம்) தோல்வியை சந்தித்துள்ளது. இதில் சொந்த ஊரில் அடைந்த 2 தோல்வியும் அடங்கும்.

முல்லாப்பூரில் நடந்த முந்தைய ஆட்டத்தில் 220 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய சென்னை அணி 201 ரன்கள் எடுத்து 18 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. சென்னை அணி இதுவரை 17 வீரர்களை பயன்படுத்தி பார்த்து விட்டது. இருப்பினும் அவர்களால் இன்னும் சரியான அணி கலவையை அடையாளம் காண முடியவில்லை. பேட்டிங், பந்து வீச்சு மட்டுமின்றி பீல்டிங்கும் மோசமாக இருக்கிறது. கடந்த 5 ஆட்டங்களில் 12 கேட்ச் வாய்ப்புகளை கோட்டை விட்டுள்ளனர். அது அந்த அணிக்கு பெருத்த பின்னடைவாக அமைந்துள்ளது. எனவே பீல்டிங்கில் வெகுவாக முன்னேற்றம் காண வேண்டியது அவசியமானதாகும்.

காயத்தால் ருதுராஜ் கெய்க்வாட் விலகி இருப்பதால் எஞ்சிய தொடருக்கு டோனி மீண்டும் கேப்டனாக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. டோனியின் கேப்டன்ஷிப்பில் சென்னை அணி எழுச்சி பெறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பேட்டிங்கில் ரச்சின் ரவீந்திரா, டிவான் கான்வே, ஷிவம் துபே நம்பிக்கை அளிக்கிறார்கள். இருந்தாலும் தொடக்கம் முதலே வலுவான ஷாட்கள் மூலம் ரன்கள் வேகத்தை அதிகரிக்கும் துடிப்பான பேட்ஸ்மேன்கள் இல்லை. மிடில் வரிசையும் பலவீனமாக தெரிகிறது. டோனி களத்தில் நின்றும் இலக்கை விரட்டிப்பிடிக்க முடியவில்லை.

பந்து வீச்சில் நூர் அகமது, கலீல் அகமது, பதிரானா, ஆர்.அஸ்வின் ஓரளவு நன்றாக பந்து வீசுகிறார்கள். ஆனால் ஆல் ரவுண்டர் ரவீந்திர ஜடேஜாவின் செயல்பாடு (5 ஆட்டத்தில் 85 ரன்கள் மற்றும் 2 விக்கெட்டுகள்) மெச்சும்படி இல்லை. இதனால் அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்புள்ளது.

3 முறை சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நடப்பு தொடரில் நிலையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. தொடக்க ஆட்டத்தில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பெங்களூருவிடம் பணிந்த கொல்கத்தா அணி அடுத்த ஆட்டத்தில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தியது. 3வது ஆட்டத்தில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பையிடம் சரண் அடைந்தது. அதற்கு அடுத்த ஆட்டத்தில் 80 ரன்கள் வித்தியாசத்தில் ஐதராபாத்தை பந்தாடியது. முந்தைய ஆட்டத்தில் 4 ரன்கள் வித்தியாசத்தில் லக்னோவிடம் போராடி தோற்றது. அந்த ஆட்டத்தில் லக்னோ நிர்ணயித்த 239 ரன்கள் இலக்கை துரத்திய கொல்கத்தா 234 ரன்கள் எடுத்து வெற்றியை நெருங்கி கோட்டை விட்டது.

கொல்கத்தா அணிக்கு பேட்டிங்கில் கேப்டன் ரஹானே, வெங்கடேஷ் அய்யர், ரகுவன்ஷி, ரிங்கு சிங் நல்ல பார்மில் உள்ளனர். விக்கெட் கீப்பர் குயின்டான் டி காக் ராஜஸ்தானுக்கு எதிராக 97 ரன்கள் விளாசினார். ஆனால் மற்ற 4 ஆட்டங்களில் 20 ரன்னை கூட தொடவில்லை. இதே போல் சுனில் நரின், ஆந்த்ரே ரஸ்செல் போதிய பங்களிப்பு அளித்தால் மேலும் வலுவடையும். பந்து வீச்சில் வைபவ் அரோரா, வருண் சக்ரவர்த்தி, ஹர்ஷித் ராணா தங்களுக்குரிய நாளாக அமைந்தால் மிரட்டி விடுவார்கள்.

மொத்தத்தில் சரிவில் இருந்து மீண்டு வெற்றிப் பாதைக்கு திரும்ப சென்னை அணியும், 3வது வெற்றியை குறி வைத்து கொல்கத்தாவும் வரிந்து கட்டுவதால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது. இவ்விரு அணிகளும் இதுவரை 29 முறை நேருக்கு நேர் மோதி இருக்கின்றன. இதில் 19ல் சென்னையும், 10ல் கொல்கத்தாவும் வெற்றி பெற்று இருக்கின்றன.

# ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்: பி.வி.சிந்து அதிர்ச்சி தோல்வி



ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி சீனாவின் நிங்போ நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில், இன்று நடைபெற்ற 2வது சுற்றில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து , ஜப்பான் வீராங்கனை அகானே யமகுச்சி உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய அகானே யமகுச்சி 21 11, 1621, 21 16 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார் . இதனால் பி.வி. சிந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.